மாதர் போதினி

No. 253 ஜனுவரி 1919 No. 1

A MOTTO FOR THE NEW YEAR 1919

1919-ம் புதுவருஷப் பிரமாணம்

'எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்.'

'வாய்த்த சமயத்தை உபயோகியுங்கள்.'

இப்புதுவருஷத்துப் பிரமாணமாக மேற்கூறிய இரண்டு வாக்கியங்களையும் ஏற்றுக்கொள்வோமாக.

இப்போது நமது இருதயம் நன்றியறிதலால் நிறைந்திருக்கிறது. யுத்தம் ஓய்ந்து சமாதானமுண்டானதால் தேவனுக்குத் துதி செலுத்திக் கொண்டிருக்கிறோம். கடந்த வருஷத்தில் ஆண்டவர் பாராட்டின தயவுக்காகவும், செய்த நன்மைகளுக்காகவும், இப்புதுவருஷத்தைக் காணச்செய்ததற்காகவும் அவரைத் துதிக்கிறோம்.

தேவன் நமக்குச் செய்வதெல்லாம் நன்மையே. நமக்கு என்ன நேரிட்டாலும் நன்மைக்கென்றே நேரிடுகிறதென்பது ஓர் நிச்சயமான காரியம். நமது பார்வைக்கும் மதிப்புக்கும் நன்மைபோல் தோன்றுங் காரியங்களுக்காக அவரை ஸ்தோத்திரிக்கிறோம். துன்பம், கஷ்டம், நஷ்டம், நோவு, மரணம் வரும்போது அவரைத் துதிக்கிறதில்லை. தேவனுடைய பிள்ளைகள் யார்யாரோ அவர்களெல்லாரும், இவைகள் நமது நன்மைக்காக தேவன் அனுப்பும் ஆசீர்வாதங்களென்பதை மறக்கக்கூடாது. சகலவித துன்பங்களும் மாறுவேடம் பூண்டுவரும் ஆசீர்வாதங்களே. ஆதலின் என்ன நேரிட்டாலும் சகலத்திலும் ஸ்தோத்திரஞ் செலுத்த தேவனுடைய பிள்ளைகள் கற்றுக்கொள்ளவேண்டும். இவ்வித ஜீவியத்தில் இப்புதுவருஷத்தில் வளருவோமாக.

இரண்டாவது, வாய்த்த சமயத்தை உபயோகிக்கவேண்டும். நமது ஜீவியம் நற்சமயங்களால் நிறைந்திருக்கிறது. அவைகளை நாம் எவ்வாறு உபயோகிக்கிறோம்? இழந்துபோன சமயம் திரும்ப வரமாட்டாது. தகாதவிதமாய் உபயோகித்த சமயம் நமக்கு விரோதமான சாட்சியாகும். ஆதலின் விழித்திருந்து சமயத்தைக் கைவிடாமல் நேர்வழியில் உபயோகிப்பதவசியம்.

சமயம் என்பது, நம்மால் ஏதோவொரு நன்மை விளைவிக்கக் கூடிய ஏதுவே. நமது வார்த்தைகளால் நன்மை விளையும். ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற் பழங்களுக்குச் சமானம். நமக்கு உண்மையான வாஞ்சை யிருக்கும் போது சமயங்களைக் கண்டுபிடிப்பதெளிதாகும். திருவசனத்தைச் சொல்ல ஏதுவாகும் சமயங்களை விழிப்போடு தேடுவோமாக.

நன்மை செய்ய எண்ணிறந்த சமயங்களுண்டு. 'ஒருவன் நன்மை செய்ய அறிந்திருந்தும் அதைச் செய்யாமற்போனால் அது அவனுக்குப் பாவமாகும்.' எத்தனையோ பேர் நமது உதவிக்காகக் காத்திருக்கிறார்கள். நாம் அவர்களுக்கு உதவிசெய்வதால் நமக்கே நன்மை செய்துகொள்ளுகிறோம். கைம்மாறு கருதாமல் பிறருக்கு நன்மை செய்வோமாக.

மேற்கூறிய இரு பிரமாணங்களையுங் கவனித்து அதின்படி செய்தால் இவ்வருஷம் நமக்கு ஆசீர்வாதமுள்ளதாயிருக்கும்.

THE BELOVED SON—JOSEPH

விசேஷமாய் நேசிக்கப்பட்ட மகன்–யோசேப்பு

யாக்கோபின் குடும்பம். யாக்கோபின் குடும்பத்தை ஒரு கூடாரக் கிராமமாகப் பாவிக்கவேண்டும். ஏனெனில் யாக்கோபுக்கும் அவன் மனைவிகளுக்கும் மக்களுக்கும் மாத்திரமல்ல, ஆபிரகாமைப்போல அவனுக்குத் திரளாயிருந்த வேலைக்காரருக்கும் கூடாரங்கள் போடப்பட்டிருந்தன. எப்போதும் எல்லாரும் கூடாரங்களிலிருக்கமாட்டார்கள். ஏனெனில் யாக்கோபுக்குத் திரளான ஆடுகளிருந்ததால் அவைகளுக்குப் போதுமான ஆகாரம் தேட அவர்களில் சிலர் அநேக மைல் பிரயாணம்பண்ணவேண்டும். அவர்கள் கூடாரங்கள் பட்டணங்களுக்குத் தூரத்தில் நாட்டுப்புறத்தில் அடிக்கப்பட்டிருந்தன. அந்த வேலைக்காரர் முரடரும் மற்ற ஊர்களிலுள்ள அவர்களைப்போன்ற வேலையாட்களோடு மேய்ச்சலைப் பற்றியும் கிணறுகளைப்பற்றியும் சண்டைபண்ணுகிறவர்களுமாயிருந்தார்கள். ஒரு இடத்திலுள்ள மேய்ச்சல் அற்றுப்போனவுடனே வேறொரு இடத்திற்குப் போவது அவ்சியமாகையால் அவர்கள் கூடாரங்களில் வாசம்பண்ணினார்கள். ஆகையால் அவர்கள் அலைந்துதிரிகிறவர்களாய் இருந்தார்கள். இதையெல்லாம் கவனிக்கையில் யாக்கோபின் குடும்பத்தார் முரடரும் அடங்காத ஆவியுள்ளவர்களுமாயிருந்தார்களென்பது ஆச்சரியமல்ல. யாக்கோபின் குமாரர் யாவரும் ஒரே தாயின் பிள்ளைகளல்ல; யாக்கோபுக்கு ஒன்

றுக்கு அதிகமான மனைவிகள் இருந்ததுமன்றி, அக்காலத்து வழக்கம்
போல மறுமனையாட்டிகளாலும் அவனுக்குப் பிள்ளைகளிருந்தன.
இந்த வழக்கம் துன்பத்துக்கிடமானது. இதை வேதாகமத்தின் முந்
தின புஸ்தகங்கள் விளக்குகின்றன. ஆபிரகாமுக்கு ஆகார், இஸ்ம
வேல் என்பவர்களால் உண்டான வருத்தம் முதலிய திருஷ்டாந்
தங்களினுல் பிள்ளைகள் ஒரே தகப்பன் தாயுடையவர்களாயிருந்தால்
தான் மேல்தரமான குடும்ப பாக்கியம் உண்டாகக்கூடுமென்று
தேவன் கிரமமாய்ப் போதித்தார். தேவன் வார்த்தைகளினுல்
போதிக்கிறதைவிட அனுபவத்தின் மூலமாய்ப் போதிக்கிறுர்.
மனுஷர் மிகவும் மந்தமாகத்தான் படிக்கிறுர்களென்றும் அவர்கள்
பலமுறைகளையும் சோதித்து உசிதமானது எதென்று கண்டுபிடித்
தால்தான் சரியாய்ப் படிப்பார்களென்றும் தேவன் அறிவார். ஆகை
யால் பழைய ஏற்பாட்டுப் பிதாக்கள் செய்ததுபோல நாமும் செய்ய
லாம் என்று எண்ணுவது பெரிய தப்பிதம். சன்மார்க்க ஆவிக்குரிய
ஜீவனில் அவர்கள் வெறுங் குழந்தைகள். அவர்கள் காலத்திற்குப்
பின் அவர்கள் அறியாத பல காரியங்களை தேவன் நமக்குப் போதித்
திருக்கிறுர். அவர்கள் அறிவீனத்தினிமித்தம் தேவன் கண்சாடை
யாய் விட்டதுபோல நம்மிடம் இருக்கமாட்டார். யாக்கோபின்
குடும்பம் பிரிவினையுள்ள குடும்பம். அவனுடைய பல குமார
ருக்குள் பல சண்டைகள் உண்டாயின. இந்த விஷயத்தில் யாக்
கோபு மிகவும் மதியீனன். அவன் ஒரு பக்கத்தில் சார்ந்தான்.
ஆனுல் ஞானமுள்ள எந்தத் தகப்பனும் ஒரு பிள்ளையைவிட இன்
னொரு பிள்ளையை தாட்சண்ணியமாய் நடத்தமாட்டான். யாக்கோ
பின் இந்த மதியீனம் குடும்பத்தின் துன்பத்தை அதிகரிப்பித்தது.

யோசேப்பு, யாக்கோபு அதிகமாய் நேசித்த ராகேலின் இரண்டு
மக்களில் மூத்தவன். இந்தக் காரணத்தினுல் அவன் மற்றவர்களை
விட இவனை அதிகமாய் நேசித்தான். அவனை அதிகமாய் நேசித்
ததைக் காட்ட பல வருணமுள்ள ஒரு அங்கியை அவனுக்குச் செய்
வித்தான். யோசேப்பு புத்திக்கூர்மையுள்ள பையன்; அவன் தகப்
பன் அதிக ஞானமுள்ளவனுயிருந்தால் அவன் அவ்வளவு துன்பப்
பட்டிருக்கமாட்டான். யோசேப்பு பெரியவனுகவேண்டுமென்ற
ஆசையுள்ளவன். இதைப்பற்றி அவன் அதிகமாய் நினைத்ததால் அவன்
சொப்பனங்கள் அதற்கிசைவாய் இருந்தன. சூரியனும் சந்திரனும்
முதலாய் தன்னை வணங்கினதாகச் சொப்பனங்கண்டான். ஒரு
பையன் தனக்குமுன் ஒரு உயர்ந்த இலக்கை வைப்பது நல்லதுதான்.
எவ்வளவு அதிக உயரமாய் ஒருவன் இலக்குநோக்குவானே அவ்
வளவு உயரமாய்ச் சுடுவான். ஒருவன் எவ்வளவு உயருவானே

அவ்வளவு அதிக நன்மை செய்யக்கூடியவனுவான். நம்மை முன் செல்லச்செய்வதற்கு தேவன் சொப்பனங்களையும், தரிசனங்களை யும், நம்பிக்கையையும், எதிர்பார்ப்புகளையும் தருகிறார். ஆனால் பலர் யோசேப்பைப்போல தப்பிதம்செய்து இதினுல் பாவத்தை விளைவித்துக்கொள்ளுகிறார்கள். மற்றவர்கள் தங்களுக்குத் தாழ்ந்த வர்கள் என்றும் மற்றவர்கள் தங்களை வணங்கும் காலம் வரும் என்றும் எண்ணுவதால் குற்றவாளிகளாகிறார்கள். இது பாவமும் கிறிஸ்தவ தன்மைக்கு விரோதமானதுமாயிருக்கிறது. உங்களில் பெரியவன் ஊழியக்காரனுயிருக்கக்கடவனென்று நமது கர்த்தர் சொன்னார். தேவன் நமக்கு விசேஷித்த திராணிகளைத் தந்திருக் கிறாரானால் அவைகளை மற்றவர்களின் ஆசீர்வாதத்திற்கென்று உப யோகிக்கத் தந்திருக்கிறார். யோசேப்பு தமது பெரிய மனுஷரில் ஒருவனுயிருக்க தேவன் குறித்திருந்தார். ஆனால் அவன் சுபாவத் தில் ஒட்டியிருந்த களிம்பாகிய பெருமையையும் மேட்டிமையையும் எரித்துப்போட மிகுந்த உபத்திரவத்தினூடே நடத்தவேண்டியதா யிருந்தது. ஒரு பையன் அல்லது வாலிபன் தன் சகோதரர் சினே கிதரைவிடத் தனக்கு அதிக திராணியிருக்கிறதென்று காண்பானு னல், அவன் அவைகளைத் தந்த தேவனை நினைத்து, பெருமையாகிய பாவத்திற்குள் விழாதபடி நாடோறும் ஜெபித்து, மற்றவர்களுக்கு உதவிபுரிந்து அவர்களை வருத்தப்படுத்தாதபடி காத்துக்கொள்வானுக. இது அவன் வல்லமையைக் குறைக்காமல் அதிகப்படுத்தும்.

யோசேப்பின் சகோதரர். அவர்கள் முரடர். அவர்கள் கொலைக்கும் பழகாதவர்களல்லவென்று காணுகிறது. ஏனெனில் யோசேப்பு தனிமையாய்த் தங்கள் கையில் அகப்பட்டபோது உடனே அவனைக் கொல்ல எத்தனம்பண்ணினுர்கள். பொறாமை அவர்கள் பாவம். நாம் முன் பார்த்தபடி அவனை வெறுக்க அவர் களுக்குச் சில நியாயங்களிருந்தன. என்றாலும் பொறாமை கொடிய பாவம். தீமையான எண்ணத்தை எவ்வளவு கொடிய பாவமென்று வற்புறுத்தினது நமது இரட்சகரின் போதனைகளில் ஒரு விசேஷம். ஒரு மனுஷன் ஒன்றைத் தீமையான ஆசையோடே பார்ப்பானு னல், உடனே அந்த ஆசையை விலக்க முயற்சியாவிட்டால், அது அந்தப் பாவத்தைச் செய்ததற்குச் சரி. இவ்விதமாகப் பலர் தங்கள் இருதயத்தில் கொலைபாதகர். தான் கொலைபாதகஞ்செய்யத் துணியா விட்டாலும் மற்றொருவனின் சாவை மிகவாய் ஒருவன் விரும்ப லாம். தீமையான எண்ணங்களிலெல்லாம் பொறாமையே கொடி யது. தேவன் அன்பாய் இருக்கிறார். அன்புக்கு எதிராயிருப்பது தேவனுக்கு எதிராயிருப்பது போலும். பொறாமையை எவன்

வளர்க்கிறானே அவனை அது நிர்ப்பாக்கியனாக்கி, அவன் பாக்கியத்தை அழித்து, அவனைப் பொய்யனும், மாய்மாலக்காரனுமாக்கி விடுகிறது. ஒரு சகோதரன் அல்லது சிநேகிதன் ஜீவிய ஓட்டத்தில் நமக்கு அதிகமாய் முன்செல்வதைப் பார்ப்பது மிகவும் வருத்தம். நாம் உண்மையாய்ப் பிரயாசப்பட்டாலும் நாம் அதிகமாய் முன்செல்லவில்லை. அவனோ அதிக முயற்சியின்றி லகுவாய் முந்தி பெரிய ஸ்தானத்தை அடைகிறான். இது சகிக்க அரிது. ஆனால் இங்கே கிறிஸ்தவ அருள் விளங்கவேண்டும். நமது சிநேகிதரின் அனுகூலத்தில் நாம் சந்தோஷிக்க அருள் கிடைக்கவும் பொறாமையான எண்ணங்களை விலக்கவும் தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளவேண்டும். தேவன் உயர்ந்த நிலைமையையோ தாழ்ந்த நிலைமையையோ கவனிக்கிறவரல்லவென்று நாம் ஞாபகம்பண்ண வேண்டும். அவர் உண்மையைத்தான் காரியமாக எண்ணுகிறார். நமது சகோதரனுக்கு அவர் அதிக ஈவுகளைக் கொடுத்திருக்கிறாரானால் அவர் அவனிடம் அதிகம் எதிர்பார்க்கிறார். தேவனுடைய நியாயத்தீர்ப்பில் பிந்தினோன் முந்தினோனையும் முந்தினோன் பிந்தினோனையும் காணப்படலாம். ஜெயங்கொள்ளுகிறவனுக்கு அதாவது, உண்மையுள்ளவனுக்கு ஜீவகிரீடம் கொடுக்கப்படும்.

THE FAITHFUL SERVANT—JOSEPH

உண்மையுள்ள ஊழியன்—யோசேப்பு

யோசேப்பை வேலைக்காரனாகவும் ஆளுகிறவனாகவும் பார்ப்போம். அவன் சுபாவம் இரண்டு விசேஷித்த விதமாய் விளங்கிற்று. அவன் வேலையிலெல்லாம் அவன் சாமர்த்தியமுள்ளவனாயிருந்ததுமன்றி அவன் நம்பிக்கைக்குரியவனாயுமிருந்தான். இந்த இரண்டு சுபாவங்களும் எந்த மனுஷனையும் பிரயோசனமுள்ள வேலைக்காரனாக்கும். அதோடு, அந்தச் சுபாவத்தை நெடுங்காலம் பழக்கமாக்கினால் அது ஜீவிய இயல்பாகி அவனை ஆளத்தகுந்தவனாக்கும். உபாத்திமார் இதை மாணாக்கரின் மனதில் உறுத்தவேண்டும். ஏனெனில் இந்தியாவில் மார்க்கத்திற்கும் இவ்வித சுபாவத்திற்கும் சம்பந்தமில்லையென்று எண்ணப்படுகிறது. ஆராதிப்பதும், யாவர் நேருக்கும் பிரியமாய் நடந்துகொள்வதும், அதிக உறுதியில்லாத சாந்தமான சுபாவமுமே மார்க்கம் என்று கிறிஸ்தவர்களிலுங்கூட பலர் நினைக்கிறார்கள். நமது வேதாகமம் அப்படிப் போதிக்கிறதில்லை. முதலாவது சன்மார்க்க சுபாவமில்லாத இடத்தில், தேவனுக்கு நேரே சரியான நிலை அல்லது மார்க்கம் இருக்கக்கூடா

தென்று அது போதிக்கிறது. முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அதின் நீதியையும் தேடுங்கள் என்பது நமது கர்த்தரின் கட்டளை. நீதியென்பது சரியான சுபாவம். இஸ்ரவேலர் தங்கள் கொடுக்கல் வாங்கல்களில் ஏமாற்றினதாலும், ஐசுவரியவான்கள் ஏழைகளை ஒடுக்கினதினாலும் நியாயஸ்தலங்களில் நீதிசெய்யப்படாததாலும், அதாவது அவர்கள் நீதியாய் நடவாததாலும் தேவன் அவர்களைத் தண்டித்தார் என்பது தீர்க்கதரிசிகள் படிப்பித்த பெரிய போதனை. யோசேப்பில் வேலைக்காரனைக் காணப்பட்ட இரண்டு முக்கிய இலட்சணங்களையும் பார்ப்போம். முதலாவது அவன் செய்த யாவற்றையும் தாற்பரியத்தோடு செய்தான். வேலைக்காரர் அநேகர் தங்கள் சம்பளத்திற்காகமாத்திரம் வேலை செய்கிறார்கள். யாதொரு தாற்பரியமுமின்றி நாளைக்கழித்து சம்பளத்தைப் பெற வேண்டுமென்பதே அவர்கள் எண்ணம். இந்தத் தன்மை சுமைசுமக்கும் மிருகத்திற்குரியது. புத்தியுள்ள மனுஷனின் தன்மை இதல்ல. கிறிஸ்தவனுக்கு இது பொருந்தவே பொருந்தாது. தாற்பரியமின்றி ஒருவனும் தன் வேலையைச் சரியாய்ச் செய்துகொள்ளக்கூடாது. அதைச் செய்யும் உத்தம வழி எதுவென்று அவன் ஆராயமாட்டான். தன் எஜமானின் லாபத்தைப் பாரான். அவன் கவலையற்றவனாய் இருப்பதால் தன்னை அறியாமலே பல நுட்பமான பாகங்களை விட்டு விடுவான். மற்றச் சுபாவம் நம்பிக்கைக்குரியவனாயிருத்தல். இதில் உண்மையும் சத்தியமும் அடங்கியிருக்கின்றன. சில வேலைக்காரருக்குத் தங்கள் வேலையில் தாற்பரியமுண்டு. அவர்கள் சாமர்த்தியக்காரர், ஆனால் அவர்கள் எஜமானின் பணத்தைக் களவுசெய்வார்கள். கண்டுபிடிக்கப்படுவார்களென்ற பயத்தால் பெருந்தொகைகளைக் களவுசெய்யாமல் நாடோறும் சிறு சிறு தொகைகளை எடுத்துக்கொள்வார்கள். வேறு பலர் ஜோலி சம்பந்தமான எல்லாக் காரியங்களையும் உண்மையாய்ச் சொல்லமாட்டார்கள். சில காரியங்களை மறைத்துக்கொள்வார்கள். எஜமான் எல்லாவற்றையும் கண்டுபிடித்துக்கொள்ளக்கூடாவிட்டாலும், காரியம் யாவும் க்ஷேமமாய் நடக்கவில்லையென்று அவன் அறிவான். வேலைக்காரன்மேல் அவனுக்கு நம்பிக்கை விட்டுப்போம். ஆனால் மேற்சொல்லிய குணங்களை அவன் உடையவனாயிருப்பானானால் அவன் எவ்வளவு பிரயோஜனமுள்ளவனாகிறான்! அவன் வேலையில் தாற்பரியங் காண்பிக்கிறானால், அதை அதிக செம்மையாய்ச் செய்யும் வழிவகைகளை எப்போதும் தேடுவான். அவன் நம்பிக்கைக்குரியவனானால், அவன் எஜமானுக்கு வருத்தமும் கவலையும் மிகவாய்க் குறைந்துவிடும். அப்போது அவன் வெறும் வேலைக்காரனாக எண்ணப்படாமல் எஜ

மாஞல் சமமாக எண்ணப்படுகிமுன். கிறிஸ்தவ பிள்ளைகள் முன்னேறிச் செல்ல விரும்புகிமுர்கள். அதற்கு இதுதான் உத்தம வழி. திறத்தை நாம் வருவித்துக்கொள்ளக்கூடாது, ஆஞல் உண்மையை உண்டுபண்ணிக்கொள்ளலாம். தாங்கள் தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்தவர்களானதால், அல்லது தாங்கள் ஏழைகளாயிருப்பதால், தங்களுக்குச் செல்வாக்கில்லாததால் தங்களுக்கு முன்செல்லத் தடை யிருக்கிறது என்று சிலர் சொல்லுகிறதுண்டு. இவை அடிக்கடி முயற்சி செய்யாமலிருந்துகொண்டு சொல்லும் சாக்குப்போக்கு. இந்தக் குணங்களை உடையவனுயிருக்கும் எவனும் பிரயோஜனமுள்ளவனுவான்.

நமது பாடத்தில் ஒரு காரியத்தைப்பற்றிக் கருத்தாயிருக்கவேண்டும். கிறிஸ்தவ மனுஷன் இதைப் படிப்பிப்பதுபோலவே உலகத்தானும் படிப்பிக்கலாம். இந்தக் குணங்களால் லாபமுண்டாவதால் உலகத்தான் இதைப் போதிப்பான். ஆஞல் கிறிஸ்தவன் இவைகள் தேவ சுபாவமாகையால் இவைகளை வற்புறுத்தவேண்டும். தேவன் தம்முடைய வேலையையெல்லாம் உண்மையாய்ச் செய்திருப்பதால் நாம் நமது வேலையில் தாற்பரியங்காட்டவேண்டும். தேவன் உண்மையுள்ளவராகையால் நாமும் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். நாம் மனுஷரைப் பிரியப்படுத்த அல்ல தேவனைப் பிரியப்படுத்த வேலைசெய்யவேண்டும், இதுதான் தேவபக்திக்கும் லௌகீக சன்மார்க்கத்திற்குமுள்ள வித்தியாசம். உலகத்தான் லாபத்திற்காக சன்மார்க்கனுயிருப்பான்! கிறிஸ்தவனே தான் தேவன் சமுகத்திலிருப்பதால் வேறு வகையாய் நடக்கமுடியாததினிமித்தம் சன்மார்க்கனுயிருக்கிமுன். உலக லாபம் அவன் எதிர்பார்ப்பின் ஒரு பாகமல்ல. தேவன் யோசேப்போடு இருந்ததால் அவன் ஆசீர்வதிக்கப்பட்டானென்று வாசிக்கிமேம். அது தேவனேடு யோசேப்பு இருந்தான் என்பதை மாற்றிச் சொல்லுவதுமட்டும். ஏனெனில் தம்மோடு சேராதவர்களோடு தேவன் சேருகிறதில்லை. இதுதான் யோசேப்புடைய ஜீவியத்தின் அந்தரங்கம். அவன் தேவசமுகத்தில் ஜீவித்தான்; தேவனுக்கு ஊழியஞ்செய்தாப்போல் உழைத்தான். ஆகையால் அவன் தன் வேலையில் தாற்பரியங்காட்டி உண்மையாயிருந்தான். மனுஷர் அவனை நம்பி கனப்படுத்திஞர்கள். யோசேப்பில் இந்தக் குணங்களைப் பார்ப்போம்.

அடிமையான யோசேப்பு. அரபிய வியாபாரிகள் யோசேப்பை வாங்கி எகிப்துக்குக் கொண்டுபோஞர்கள். (மீதியானியர் என்றாலும் இஸ்மவேலரென்றாலும் அரபியரே.) அங்கே அவன் ஆடுமாடு விலைப்படுத்துவதுபோல விலைப்படுத்தப்பட்டான். மனுஷர் வந்து

அவன் பெலசாலியாவென்றறிய அவன் உறுப்புக்களைப் பிதுக்கிப் பார்த்து ஓடவும் சாடவும் பண்ணினார்கள். தன் சகோதரர்மேல் ராஜாவாவான் என்ற சொப்பனங்கள் இப்போதெங்கே? யோசேப்பு அப்போது 17 பிராயமாயிருந்தான். அவன் பிராயத்து வாலிபர் பலர் தேவன் என்னை பரிகாசம்பண்ணிப்போட்டார், இனி நான் அவரில் நம்பிக்கைவைக்கமாட்டேன் என்று சொல்லியிருப்பார்கள். ஆனால் யோசேப்பு ஒரு சிரேஷ்டமான பையன். அவன் தேவன்பேரில் பலத்த பற்றுள்ளவன். கடைசியாய் அவன் விலைப்பட்டான். முதலாவது அவன் எஜமானின் வீட்டிலுள்ள அற்பமான வேலைகளைச் செய்யவேண்டியதாயிற்று ; அடிமைக் கடிமையாயிருந்தான். ஆனால் வேலையில் தாற்பரியமும் உண்மையும் சீக்கிரம் தெளிவாயின. கிரமங்கிரமமாய் அவன் உயர்த்தப்பட்டு சீக்கிரம் வீட்டு அதிகாரியானான். யோசேப்பு வீட்டதிகாரியாயிருந்தபோது எல்லாம் க்ஷேமமாயிருந்ததென்று எஜமான் கண்டான்.

காவற்கிடங்கிலிருந்த யோசேப்பு. அதிகாரத்திற்கும் அந்தஸ்திற்கும் கொண்டுபோகும் சரியான பாதையில் யோசேப்பு இருந்ததாகத் தோன்றினகாலத்தில் அவன் அந்த உன்னத பதவியிலிருந்து அடிமைக்கும் கீழான நிலைமைக்குத் தள்ளப்பட்டான். அவனுக்கு விரோதமாக ஒரு கள்ளப் பிராதுண்டாயிற்று ; பார்வோன் தன் கோபத்தில் அவனைச் சிறைச்சாலையில் வைத்தான். எகிப்தில் சிறைச்சாலையில் போடப்பட்ட அடிமைக்கு யாதொரு உரிமைகளுமில்லை. அவனைக் கொன்றாலும், அவன் செத்தாலும் விசாரிப்பாரில்லை. முதலாவது யோசேப்பு கடினமாய் நடத்தப்பட்டிருப்பான். புசிக்கப் போதுமான ஆகாரமில்லாமல் கடின வேலைசெய்யவேண்டியதாயிருந்தது. இங்கும் தேவன் தன்னை மறந்துவிட்டதாக யோசேப்பு எண்ணியிருக்கலாம். அவன் எவ்வளவுகாலம் சிறைச்சாலையிலிருந்தானென்று தெரியாது. இரண்டு வருஷத்திற்கதிகம் இருந்தானென்பது திண்ணம். அக்காலத்தில் அவனுடைய இரண்டு சுபாவங்களும் விளங்கினதால் தலைவன் அவனை நம்பினான். சீக்கிரம் யதார்த்தத்தில் அவன்தான் சிறைச்சாலைத் தலைவன்.

ஆளும் யோசேப்பு. கடைசியாய் யோசேப்புக்கு ஒரு பெரிய தருணம் வந்தது. எகிப்தின் அதிபதியாகிய பார்வோன் இரண்டு சொப்பனங்களைக் கண்டு மனவருத்தமடைந்தான். வியார்த்திசெய்ய ஒருவருமில்லை. வியார்த்திபண்ணும் சக்தி யோசேப்புக்குண்டு என்று பெயர். அவனுக்கு ஆளனுப்பினார்கள். பார்வோன் 'நீ சொப்பனத்தை வியார்த்திபண்ணக்கூடுமா?' என்று கேட்டபோது, அவன் சொன்ன விடையைக் கவனியுங்கள். 'என்னால் கூடாது, தேவனால்

கூடும்' என்று அவன் சொன்னான். அவன் அடைந்த எல்லா வருத்தங்களினூடேயும் தேவன்பேரில் பற்றுதலுள்ளவனாயிருந்தது ஆச்சரியம். யோசேப்பிலுண்டான மாற்றத்தைக் கவனிக்க. அரிக்கட்டுகளைப்பற்றிய சொப்பனத்தை அவன் கண்டபோது தன்னைப்பற்றிய நினைவுகள் அவனை நிரப்பின: இப்போதோ தேவனைப்பற்றி மாத்திரம் நினைக்கிறான். தன்னில் நம்பிக்கை குறையாவிட்டாலும், அவன் தாழ்மையுள்ளவனானான்! தான் காரியங்களை நடத்தக்கூடுமானாலும் அந்த சாமர்த்தியம் தேவனுடைய ஈவு என்று உணர்ந்தான். பல வருஷ உபத்திரவத்தால் இந்தப் பெரிய மாற்றமுண்டாயிற்று. 13 வருஷத் துன்பத்தால், பெருமையும் முன்னேறிப்போக ஆத்திரமுமுள்ள வாலிபன், சாமர்த்தியமும், நம்பிக்கையும், தாழ்மையுமுள்ள வாலிபனானான். யோசேப்புக்கு நியமித்த பெரிய வேலைக்கு அவனை பக்குவப்படுத்தும் உன்னத வேலையை தேவன் செய்துமுடித்தார். பின்பு அவனை ஒரு பெரிய உத்தியோகத்திற்கு நியமித்தார். ஆனால் அவன் சொப்பனங் கண்டவண்ணம் அதிகாரமும் மற்றவர்களின் வணக்கமும்பெற்றுக்கொள்ளும் இராஜ உத்தியோகத்திற்கல்ல, ஊழியஞ்செய்யும் ஒரு உத்தியோகத்திற்கு நியமிக்கப்பட்டான். யோசேப்பு தேசத்திற்கு நன்மைசெய்யவும் ஜனங்கள் பஞ்சத்தால் சாகாதபடி அவர்களைக் காக்கவும் தகுதியுள்ளவனானபடியால் அவன் அப்படி நியமிக்கப்பட்டான். அதில் கடின வேலை செய்யவேண்டும். அங்கே அவனுடைய இரண்டு சுபாவங்களும் விளங்கின. அவைகள் அவன் ஜீவியத்தின் பழக்கமாகிப்போனதால் அவன் அவைகள் தன்னிலிருந்ததென்று உணரத்தானுமில்லை. இந்தச் சுபாவங்கள் தாற்பரியமும் உண்மையும். இவைகள் சுயநயத்தாலல்ல, தேவனைச் சார்ந்ததால் இயக்கப்பட்டன.

THE FORGIVING BROTHER—JOSEPH

மன்னிக்கும் சகோதரன்—யோசேப்பு

சகோதரர். பஞ்சத்தின் கொடுமை இந்த முரடரை தாழ்மையுள்ளவர்களாக்கிற்று. யோசேப்பின் சமுகத்தில் அவர்கள் தாழ்மையுள்ளவர்களாயிருந்தார்கள். ஆனால் அவர்கள் எதார்த்தமாய் குணப்படவில்லையென்று காண்பது சங்கடம். அவர்கள் யோசேப்பை ஒருக்காலும் முற்றிலும் நம்பவில்லை. தங்கள் இருதயம் கெட்டதாயும் பழிவாங்கும் ஆவியால் நிறைந்ததாயுமிருந்ததால் யாரும் முற்றிலும் மன்னிப்பார்களென்று அவர்கள் உணரக்கூடாதிருந்தது. யோசேப்பு அவர்களுக்காகக் கவலைப்பட்டு அவர்களை ஆறுதலாக ஜீவிக்கச்

செய்து ஐசுவரியவான்களாக்கினபோதிலும், இப்படி யெல்லாம் செய்தாலும் தாங்கள் அவனைத் துன்பப்படுத்தினதற்காகப் பழிவாங்க வேண்டுமென்ற எண்ணத்தை அவன் விடமாட்டான் என்றே நினைத்தார்கள். தகப்பன் நேருக்கு அவன் கொண்டிருந்த அபிமானத்தால் மாத்திரம் தங்களை அவன் துன்பப்படுத்தவில்லையென்று எண்ணினார்கள். ஜனங்கள் நம்மிடம் மற்றவர்களைக் குற்றப்படுத்துங் காரியங்களைச் சொல்லுகையில் தங்கள் சொந்த குற்றங்களையும் தீமைகளையும் மற்றவர்கள்மேல் ஏற்றிச் சொல்லுகிறார்களா என்று கவனமாய் நிதானிக்கவேண்டும். தீமையான மனமுள்ளவர்கள் தங்களைவிட மற்றவர்கள் மனச்சுத்தமுடையவர்களாயிருக்கக் கூடுமென்று எண்ணார்கள். பலர் மற்றவர்களைப்பற்றித் தீமையாய்ப் பேசுவது, பொல்லாதவர்கள் மற்றவர்களும் தங்களைப்போல்தானிருப்பார்கள் என்று எண்ணி தங்கள் குற்றங்களை அவர்கள்மேல் காட்டுவதால்தான். யோசேப்பின் சகோதரர் முதலாவது அவன்முன் நின்றபோது அவன் அவர்கள் நேருக்குக் கடினமான முகத்தைக் காண்பித்தான். அவர்கள் முரடரும் பொய்யருமானவர்கள் என்று அவன் அறிந்ததால் தான் அப்படிச் செய்தான். முன்போல அவர்கள் இன்னும் துன்மார்க்கராய் இருந்தால் அவன் உயர்ந்த ஸ்திதியிலிருந்தபோதிலும் அவர்கள் சதிக்கு இன்னும் முற்றிலும் தப்புவது கூடியதல்ல. ஆகையால் தன்னை அவர்களுக்கு வெளிப்படுத்துமுன் அவர்களைச் சோதித்தான். அவர்கள் சம்பாஷணையாலும் (42. 22), பென்யமீனைக் கொண்டுவந்ததில் காண்பித்த உண்மையாலும் அவர்கள் பழைய குற்றத்திற்காக மனஸ்தாபப்பட்டிருந்தார்களென்றும் உண்மையைக் கற்றிருந்தார்களென்றும் அவன் அறிந்தான். தன்னைக் கடினமாய் நடத்தினவர்கள் சற்று கஷ்டப்படுவதைப் பார்ப்பது யோசேப்புக்குக் கொஞ்சம் சந்தோஷத்தைக் கொடுத்திருக்கும். அவனும் மனுஷன் தானே. அவர்களுடைய பொய்க்காகவும் தந்திரத்திற்காகவும் அவர்கள் இவ்வளவு பட்டது சரி என்று நாமும் எண்ணுகிறோமல்லவா? பின்பு யோசேப்பு அன்பும் உதாரமுங் காட்டினது அவர்களை முற்றிலும் குணப்படுத்திற்று என்று நம்ப இடமுண்டு. கிறிஸ்துவுக்குள் தேவன் பாராட்டின அன்பினால் அவர் நமது இருதயத்தைக் கவர்ந்து கொண்டவண்ணமாய் யோசேப்பின் அன்பு அவர்கள் இருதயத்தைக் கவர்ந்து, பதிலாக அவர்கள் அவனை நம்பவும் நேசிக்கவும் ஏவிற்று.

யோசேப்பு. இவன் அன்பையும் உதாரத்துவத்தையும்பற்றிப் பார்த்தோம். அவன் தன் சகோதரனின் துன்மார்க்கத்தை முற்றிலும் மறந்து அவர்களுக்கு மன்னித்துவிட்டான். ஆகையால் அவர்கள் இன்னும் அவனைப் பூரணமாய் நம்பாததால் அவன்

துக்கித்து அழுதான். (வச. 17.) நமது கர்த்தரும் துக்கத்தால் இருதயம் வெடித்து மாண்டார் என்னலாம். ஏனெனில் தமது அன்பை வெளிப்படுத்தத் தெரிந்துகொண்ட ஜனம் அவரை நம்பாமல் அவரை எத்தனென்றும் கெட்ட மனுஷனென்றும் பிடிவாதமாய்ச் சொன்னார்கள். தங்கள் நல்ல எண்ணங்கள் தீமையாகக் காணப்பட்டு அவைகளைத் திருக்கி மறித்துச் சொல்வதுபோல நல்ல மனிதருக்குத் துக்கத்தைக் கொடுக்கிறது வேறொன்றில்லை. இதிலும் யோசேப்பு கிறிஸ்துவுக்கு முன்னடையாளம். அவரைப்போல தேவனுடைய அன்பையும் மன்னிப்பையும் அவமதிக்கையில் அவருக்குண்டாகும் பெரிய துக்கத்தை அவன் நமக்குக் காட்டுகிறான்.

யோசேப்பு தேவனின் இன்னொரு இரகசியத்தைக் கண்டிருந்தான். தேவன் மனுஷரின் தீய எண்ணங்களையும் தமது ஆலோசனைகளை நிறைவேற்ற உபயோகிக்கிறார். (வச. 20.) யோசேப்பின் சகோதரர் அவனுக்கு அந்தத் தீமையைச்செய்ய அவர் சித்தங்கொள்ளவில்லை: ஒருக்காலும் தேவன் தீமைசெய்ய நினைக்கிறதில்லை. ஆனால் மனிதரின் தீமையை அடிக்கடி பிரயோசனமானதாக மாற்றுகிறார். இந்தப் பாடத்தை மனிதர் படிப்பது மிகவும் பெரிய காரியம். இதை நாம் துரிதமாய்ப் படித்துக்கொள்ளுகிறதில்லை. துர்அதிர்ஷ்டங்களும் நஷ்டங்களும் வியாதிகளும் அடிக்கடி தேவனுடைய கோபத்தாலோ அதிர்ப்தியாலோ உண்டாகின்றனவென்று எண்ணப்படுகின்றன. தேவன் இவைகளில் எதையாவது அனுப்பினாலும் அவைகளைக் கோபத்தோடு அனுப்பார்; பழிவாங்கும் தண்டனையாகவும் அனுப்பார். நமது சுத்திகரிப்புக்காகவே அனுப்புவார். இவைகளெல்லாவற்றின்பின்னும் அவர் அன்பிருக்கும். தேவன் உன்னத அதிபதியென்றும், மனுஷரோ ஆவிகளோ அவர் சித்தத்தை மாற்றக்கூடாதென்றும், தேவனுடைய ஆளுகையை நடத்துகிறவைகள் அன்பும் உதாரமும் என்றும் யோசேப்பு கற்றுக்கொண்டான். தேவனைப்பற்றி இவன் இவைகளைக் கற்றுக்கொண்டதால் அவன் அதிக தாழ்மையும், அதிக உதாரமும் அதோடு அதிக நம்பிக்கையும் பெலனுமுள்ளவனானான்.

BIBLE STUDIES

THE CALL—MOSES

அழைப்பு—மோசே (தொடர்ச்சி)

போதனை

(a) கிறிஸ்துவின் அழைப்பு உன் செவியில் படுகிறதா?—இந்தியாவின் ஜனத்தொகையில் தொண்ணூறு புறமதஸ்தருக்கு

ஒருவன் மாத்திரம் கிறிஸ்தவன். உன்னைச் சுற்றிலு முள்ள இத்திரள் ஜனங்கள் உன்னால் நடத்தப்படுவதற்கு காத்துக்கொண்டிருக்கிறார்கள். பிளவுண்ட மலையிலிருந்து சுரந்து வரும் தண்ணீரைப் பானம்பண்ணத் தாகித்து நிற்கிறார்கள். வானத்திலிருந்து இறங்கிவரும் 'மன்னாவை' வாஞ்சித்து ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். என்ன செய்வாய்? 'உமது சித்தம், ஆண்டவரே' என்று சொல்லுவாயா?

(b) 'என்னை அனுப்பும்' என்று சொல்லுவதற்கு உனக்கு விசுவாசம், தைரியம், சுயவெறுப்பு உண்டா?

(c) 'ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போங்கள்—உலகத்தின் முடிவுவரைக்கும் சதாகாலங்களிலும் உங்களோடுகூட இருக்கிறேன்' என்று சொன்னவரின் தரிசனம் உனக்குக் கிடைத்திருக்கிறதா? கிடைத்தால்தான் மோசேக்குண்டான விசுவாசம், தைரியம், சுயவெறுப்பு உனக்குமுண்டாகும்.

பிரார்த்தனை

என் ரட்சகரே, உமக்குத் தேவையானபடி, எந்த வேலைக்கானாலும் எந்த வழியிலானாலும் என்னை உபயோகித்துக்கொள்ளும். இதோ, என் ஏழை இருதயம் வெறுமையான பாத்திரம்; உம்முடைய கிருபையினாலே அதை நிரப்பும். இதோ, பாவத்தினால் நிறைந்ததும், அமைதலில்லாததுமான என் ஆத்துமாவை உம்முடைய அன்பினாலே உயிர்ப்பித்து, பலப்படுத்தும். என் இருதயத்தை உம்முடைய இருப்பிடமாகச் செய்துகொள்ளும். என் நாவின் மூலமாக உம்முடைய நாமம் மகிமைப்பட்டு பரம்பும்படியாக அருள் புரியும். ஜனங்கள் உம்மை விசுவாசிப்பதற்கும் அவர்கள் க்ஷேமாபிவிருத்தி அடைவதற்கும் ஏதுவாக என் அன்பையும் பலத்தையும் உபயோகித்துக்கொள்ளும். 'இயேசுவுக்கு நான் தேவை, எனக்கு இயேசு தேவை' என்று எல்லாக் காலங்களிலும் என் பூரண இருதயத்தோடு சொல்ல பலம் வேண்டியதாயிருக்கிறபடியால் என் விசுவாசமும், நம்பிக்கையும் குறைந்துபோகாதபடி செய்யும்.

D. L. Moody.

ஊழியம்—பவுல்

அப்போஸ்தலர் 9: 1–9; 2 கொரிந்தியர் 11: 22–23 வாசிக்க.
'கிறிஸ்துவின் அன்பு என்னை நெருக்கி ஏவுகிறது' 2 கொ. 5: 14.

பவுல் குணப்பட்ட சரித்திரம் தெரியுமா? கலாத்தியாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு அவன் அச்சரித்திரத்தை எப்படி எழுதியிருக்கிறான்? கலா. 1: 11–24. அவன் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக பட்டபாடுகளை விவரிக்கவும். 2 கொரி. 11: 23–33.

1.—தரிசனமும் உத்தரவாதமும்

(a) என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்? பவுல் இப்படிக் கேட்கப்பட்டதேன்? (யோவான் 15: 25-ஐ ஒத்துப்பார்.) உன் மதாபிமானம் எப்படிப்பட்டது?

சத்தியத்திற்கு எதிர்த்து நிற்பது நியாயமா? உன்னிலிருக்கும் ஆவி எத்தன்மையானது?

(b) பவுல் எங்கே அனுப்பப்பட்டான்? அப்போஸ். 9: 11–12. அனனியா பவுலுக்குக் கொண்டுவந்த செய்தி யாது? வச. 17. கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய விரும்புகிறவர்கள் தரிசனம் பெறவேண்டும்.

மிஷன் ஸ்தாபனங்களான கலா சாலைகள், வேதசாஸ்திர சாலைகள், உபாத்திமபயிற்சி சாலைகள் எதற்காகவிருக்கின்றன?

(c) உன் முழு ஜீவிய நோக்கமென்ன? அப்போஸ். 9: 15, 16 பார்க்கவும். பவுல் கிறிஸ்துவை நோக்கிக் கேட்டது போல் நீயும் கேட்பாயா? தரிசனத்தில் பவுல் கேட்ட கேள்விக்கு இயேசு கொடுத்த மறுமொழியை உற்றுக் கவனி. 'என்ன செய்யச் சித்தமோ?'—தெரிந்துகொள்.

2.—அன்பும் ஊழியமும்

(a) பவுல் கிறிஸ்துவை எப்படிச் சேவித்தான்? (ரோமர் 1: 9, 10.) தீத்து நிருபம் முதல்வசனத்தில் அவன் தன்னை யார் என்று தெரிவிக்கிறான்? (தீத்து 1: 1–2.) ஊழியக்காரனென்றாலென்ன? நீ எப்படி ஊழியம் செய்ய விரும்புகிறாய்?

(b) பவுல் ஏன் ஊழியனானான்? ரோமர் 10: 1.

அப்போஸ்தலர் 15: 11–ல் சொல்லிய 'அவர்கள்' யார? 'நாம்' யார்? 14–ம் வசனத்தை விவரிக்கவும்.

ஊழியத்தில் பவுலுடைய அன்பினளவு எப்படி விளங்குகிறது? 1 தெச. 2: 7.

(c) பவுல் ஊழிய சம்பந்தமாய் எத்தனை பிரயாணங்கள் செய்தான்? எதினிமித்தம் அவன் 2 கொரி. 11: 23–33-ல் விவரித்திருக்கிற துன்பங்களை அனுபவித்தான்? அதற்கும் மத். 28: 19, 20-வசனங்களுக்கும் சம்பந்தமுண்டா?

போதனை

உனக்கிருக்கிற தாலந்துகளை நீ கிறிஸ்துவின் பாதத்தில் வைக்கக்கூடுமா? மத். 10 : 37, 38. நீ இரட்சிக்கப்பட்ட விதத்தை மற்றவர்களுக்குச் சொல்லக்கூடுமா? யோவான் 4 : 29. குருடனிட்ட சாக்ஷியத்தைக் கூர்ந்து கவனிக்கவும். 'இப்பொழுது காண்கிறேன்' என்றுலென்ன? யோவான் 9 : 23–34. பவுலை ஏவி இடைகட்டின தீர்மானம் (1 கொரி. 9 : 16; 2 கொரி. 5 : 14) உன்னையும் பலப்படுத்துகிறதா?

ஜெபம்

அறுப்புக்குப் பெரிய எஜமானுகிய ஆண்டவரே! முதிர்ந்திருக்கும் தானியங்கள் எங்கள் அஜாக்கிரதையினுல் உலர்ந்து விழுந்து போகாதபடி உலகத்தின் விளைச்சலை அறுப்பதற்கு ஊழியரை அனுப்புமென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். தூரத்திலிருக்கிற எங்கள் உடன் கிறிஸ்தவர்கள் மீதில் பரிசுத்தப்படுத்தும் உமது ஆவியை அனுப்பியருளும். அந்தகாரத்தில் ஜீவிக்கிறவர்களின் மீது மனமாறுதலை உண்டுபண்ணும் உமது கிருபையைக் கடாட்சியும். அன்பில் ஒரே சரீரமாக உமது ஜனங்களெல்லாரும் கட்டப்படுவதோடு எங்களெல்லாருக்காகவும் மரித்து உயிர்த்த ஆண்டவரான இயேசுகிறிஸ்துவின் பரிபூரண அளவுக்கு உமது சபை வளரும்படியாக, சுதேச விசுவாசிகளுக்குள்ளிருந்து பக்தியுள்ள ஊழியக்காரரை கூட்டங்கூட்டமாக எழுப்பியருளுமென்று உம்மை நோக்கி ஆவலாய்ப் பிரார்த்திக்கிறோம்.

Bishop Milman, 1791–1868.

பரிசுத்தம்—ஏசாயா

ஏசாயா 6–ம் அதிகாரத்தை வாசிக்கவும்.

ஏசாயா இதில் தன் சரித்திரத்தை தன்னுடைய மறு ஜனன முதல் ஆரம்பித்தெழுதுவகை கவனிக்கவும். அவனுக்குண்டான தரிசனம அவனைப் பரிசுத்தப்படுத்தும் நோக்கமுள்ளதென்று கண்டுனாக. அவன் எழுதின புஸ்தகத்திற்கு 5–வது சுவிசேஷமென்ற பேருண்டான காரணமென்ன?

1.—தரிசனத்தின் மூலமாய்ப் பரிசுத்தமாதல்

(a) ஏசாயாவுக்கு எங்கே தரிசனமுண்டானது? ஆலயத்தில் அவனுக்கென்ன காணப்பட்டது? விவரிக்கவும். தேவாலயத்தில் நீ தேவனைப் பார்க்கக்கூடுமா? சங். 43 : 4 காணவும். தாவீது எங்கே காலங்கழித்தான்?

(b) இத்தரிசனம் கண்டபோது ஏசாயா வாய்விட்டுக்கூறினதென்ன? ஏன் 'ஐயோ' வென்றான்? லூக். 5: 6–11-ல் சீமோன் பேதுருவின் அனுபவத்தை ஒத்துப் பார்க்க. இவ்வித சில திருஷ்டாந்தங்கள் கூறுக.

நீ ஆலயத்திற்குப் போனபோது தேவதரிசனத்தின் மூலமாய் உன்னை நீயே அறிந்துகொண்டாயா?

(c) ஏசாயா எப்படி பரிசுத்தமாக்கப்பட்டான்? மேலறையில் இருந்த அப்போஸ்தலர்பேரில் பரிசுத்தாவி எப்போது, எப்படி இறங்கினார்? அந்த அக்கினி நாவுகளுக்கும் இந்த அக்கினிக்கும் சம்பந்தமுண்டா? நீ எப்படி பரிசுத்தம் பெறுவாய்?

2.—பரிசுத்தத்தினால் உண்டான பலம்

(a) ஏசாயாவுக்குப் பெரிய வல்லமை எப்படி யுண்டானது? 2 இராஜா. 20: 4, 11 வசனங்களை வாசித்து அவனுடைய ஜெபப்பழக்கத்தை கவனிக்கவும். ஏசாயா 40: 29, 30, 31-ஐ படித்து சிந்தனைசெய்.

(b) அவனுடைய அறிவிப்பு எவ்விதமானது?

'கர்த்தருடைய வார்த்தை அவனுக்குண்டாகி அவர் சொன்னது', 'கர்த்தர் சொன்ன வார்த்தை'—என்ற வாசகங்களின் அர்த்தமென்ன? அவனுடைய ஜீவியம் எப்பேர்ப்பட்டது? ஏசாயா 8: 18.

(c) ஏசாயா ஜனங்களுக்குக் கூறின செய்திகளை கவனிக்கவும். பாவத்தைப்பற்றி என்ன போதித்தான்? ஏசா. 30: 1–3. இரட்சிப்பு எப்படி யுண்டாகுமென்றான்? ஏசா. 48: 9–11; 49: 14–16. இரட்சிப்புக்கதிபதியாகிய மேசியாவின் சரித்திரத்தை அவனெப்படி விவரித்தான்? இரட்சகரின் ஜனனம், ஏசா. 7: 14; அவருடைய பாடுகள், ஏசா. 53: 4–11; அவரது இரட்சண்ணிய அழைப்பு, ஏசா. 1: 18; ஏசா. 55: 1 கவனிக்கவும். தரிசனம் கண்ட ஏசாயா இரட்சகரைக் காண சலாக்கியம் பெற்றான். நீ இயேசு கிறிஸ்துவைக் காணக்கூடுமா?

போதனை

ஏசாயா பரிசுத்தமாக்கப்பட்டு கர்த்தரைச் [illegible]த்தான். உனக்கு பரிசுத்த தரிசனம் உண்டாகிறதா? அத்தரிசனத்தினாலே [illegible]முண்டானதா? 'என்னை அனுப்பும்' என்று நீ தேவனை நோக்கி சொல்லக்கூடுமோ? கிறிஸ்துவின் அன்பையும் அழைப்பையும் பார்க்கிறாயா?

ஜெபம்

நித்திய கடவுளே, என் சரீரத்தையும் ஆத்துமாவையும் என் நினைவுகளையும் என் நோக்கங்களையும் என் வார்த்தைகளையும் செய்கைகளையும் பரிசுத்தப்படுத்தும். அப்பொழுது நான் பேசுகிறதும் செய்கிறதும் எண்ணுகிறதுமான எல்லாம் உம்முடைய நாமத்தின் மேன்மைக்கென்றிருக்கும். உம்முடைய ஆசீர்வாத வார்த்தையின் மூலமாய் சமஸ்தமும் உம்முடைய ஊழியத்தில் பலனுள்ளதாயும் வல்லமையுள்ளதாயும் இருக்குமே. ஆண்டவரே! எனக்கு தேவையானவைகளெல்லாவற்றையும் நன்மையானவைகளாக ஆக்கும். இயற்கையாய் எனக்குரியவைகளை கிருபையின் ஈவுகளாக மாற்றும். அவைகளை ஒழுங்குக்குள்ளாக்கி நீர் குறித்த திட்டத்துக்கமையச் செய்து மிதப்படுத்தியருளும். கர்வம், சுயநயநாட்டம், துராசை, பகை, பழிதீர்த்துக்கொள்ளும் வைராக்கியம், அற்பாதாய வாஞ்சை, நீசத்தனமான எண்ணங்கள் முதலானவை என் ஆத்துமாவை அசுத்தத்துக்குட்படுத்தி, என் வார்த்தைகளையும் செய்கைகளையும் ஈனமாக்காதபடி செய்யும். என் சரீரம் என் ஆத்துமாவுக்கு உத்தம கருவியாயிருக்கச் செய்தருளும். என் சரீரமும் ஆத்துமாவும் சேர்ந்து இயேசு [illegible] மெய்த்தொண்டு புரியும் பணிமுட்டுகளாகப்பண்ணும். இங்கே உமது [illegible]மைக்காக நான் எல்லாக் காரியங்களையும் செய்து, முடிவில் உமது [illegible]மைக்குப் பங்குள்ளவனாக எனக்குக் கிருபைபுரியும். இயேசுகிறிஸ்துவ[illegible] மூலமாய் இப்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆமென்.

Jeremy Taylor, 1613–1667.

LESSONS FOR FAMILY WORSHIP

வேத வாசிப்பு ஒழுங்கு

1919-ஆம் ஜனுவரிமீ

1	பு.	1 சாமு.	4.	11	ச.	1 சாமு.	14.	21	செ.	1 சாமு.	24.
2	வி.	,,	5	12	ஞா.	,,	15.	22	பு.	,,	25.
3	வெ.	,,	6	13	தி.	,,	16.	[illegible]	வி.	,,	26.
4	ச.	,,	7.	14	செ.		17	24	வெ.	,,	27.
5	ஞா.	,,	8	[illegible]	[illegible]	,,	18.	25	ச.	,,	28.
6	தி.		9.	16	வி.	,,	19	26	ஞா.	,,	29.
[illegible]	[illegible]	,,	10	17	வெ	,,	20	27	தி	,,	30.
8	பு.	,,	11.	18	ச.	,,	21	28	செ.	,,	31.
9	வி.	,,	12.	19	ஞா	,,	22.	29	பு.	2 சாமு.	1.
10	வெ.	,,	13	20	தி.	,,	23	30	வி.	,,	2.
								31	வெ	,,	3.

C. L. S. PRESS, MADRAS—1919